பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 04 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

2. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்கள், மக்களவையில் தங்களின் பிரதிநிதித்துவத்தை இழக்காது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

3. நாட்டிலேயே அதிகமான மக்கள் நலத்திட்டங்களை திமுக அரசுதான் நிறைவேற்றியுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. அஇஅதிமுக ஆட்சிக் காலத்தின்போது வறட்சி, புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்கள் திறம்பட கையாளப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 43 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

<<<<>>>>

**தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.**

**அரசு விடுமுறை போக 3 நாட்களில் 234 தொகுதிகளிலும் இதுவரை 3 ஆயிரத்து 430 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.**

**இதில் ஆண் வேட்பாளர்கள் 2 ஆயிரத்து 731 பேரும், பெண் வேட்பாளர்கள் 698 பேரும் மனுதாக்கல் செய்துள்ளனர்.**

**வில்லிவாக்கம் சட்டப்பேரவைத் தொகுதியில் திருநங்கை ஒருவர் மனுதாக்கல் செய்துள்ளார்.**

**அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 84 வேட்புமனுக்களும், குறைந்தபட்சமாக பல்லாவரம், ஆர்.கே. நகர், நாங்குனேரி தொகுதிகளில் 26 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

**வேட்புமனுக்களை இன்று பிற்பகல் 3 மணி வரை தாக்கல் செய்ய அனுமதிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**

**3** மணிக்கு முன்னதாக எத்தனை பேர் வந்தாலும் அவர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு மனுக்களை தாக்கல் செய்ய அனுமதி அளிக்கப்டும் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க தகுதியானவர்கள் அனைவரையும் உள்ளடக்கிய வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட உள்ளது.

கடந்த மாதம் **26**ஆம் தேதி வரை படிவம் **6-**ஐ சமர்ப்பித்து விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களின் பெயர்கள் புதிய பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் வாக்காளர் தகவல் சீட்டு அச்சிடப்பட்டு நாளை முதல் வீடு வீடாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதில் வரிசை எண், பாகம் எண் போன்ற வழக்கமான விவரங்களோடு புகைப்படத்திற்கு பதிலாக **QR** குறியீடு இடம்பெற்றிருக்கும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்கள் நாடாளுமன்ற மக்களவையில் தங்களின் பிரதிநிதித்துவத்தை இழக்காது என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் கூச்பிஹாரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மகளில் இடஒதுக்கீடு மசோதாவை வலுப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் இம்மாதம் 16, 17 தேதிகளில் நடைபெற உள்ளது என்று கூறினார்.

நாடாளுமன்றத்தில் மகளிருக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களால் ஏராளமான பெண்கள் பயனடைந்துள்ளதாகவும் திரு. மோடி கூறினார்.

<<<<>>>>

நாட்டிலேயே அதிகமான மக்கள் நலத்திட்டங்களை திமுக அரசுதான் நிறைவேற்றி வருவதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுரையில் நேற்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநில அரசுக்கு கிடைக்கும் வருவாய், நலத்திட்டங்களுக்கு செலவிடப்படுவதாக தெரிவித்தார்.

மத்திய அரசுக்கு மாநில அரசு வழங்கும் வரி வருவாயில் திரும்பக் கிடைப்பது மிகக் குறைவாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

அஇஅதிமுகவின் 10 ஆண்டுகால ஆட்சியில் தமிழகத்தின் வளர்ச்சி பின்தங்கியிருந்ததாகவும் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தின்போது வறட்சி மற்றும் புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்கள் திறம்பட கையாளப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

நெய்வேலியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், கடந்த 5 ஆண்டு காலத்தில் திமுக அரசு 5 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கியிருப்பதாகவும், மக்களின்

முக்கியமான பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்றும் குறை கூறினார்.

பெரும்பாலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூடிக் கிடப்பதாகவும், இதனால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் விவசாயத்திற்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகம் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் தமிழர் கட்சி தேர்தலில் போட்டியிடுவதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் அதிகரித்துள்ள ஊழல் மற்றும் முறைகேடுகளை அகற்ற அரசியல் அதிகாரம் தேவைப்படுவதாக கூறினார்.

அரசியல் என்பது மக்களுக்கு சேவை செய்யும் ஒரு புனிதமான பணி என்றும், ஆனால் தமிழகத்தில் அரசியல் என்பது லாபம் ஈட்டும் தொழிலாக மாறிவிட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மே 4ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும்போது இது தெரியவரும் என்று கூறினார்.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் மக்களுக்கு நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தென் தமிழகம் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல்

மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விருதுநகர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

வடதமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 37 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது.

திருவாரூர் மாவட்டத்தில் நள்ளிரவு முதல் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது.

கடந்த பத்து நாட்களாக கடும் வெயில் சுட்டெரித்த நிலையில் இந்த மழையினால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆஃப்கனிஸ்தான் நாட்டிற்கு நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

------------

ஈரானின் அடிப்படைக் கட்டமைப்புகள் மீது அமெரிக்கா வான் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று அந்நாடு எச்சரித்துள்ளது.

------------

உத்தராகண்ட் மாநிலம் சமோலியில் பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ள போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

------------

விசாகப்பட்டிணத்தை தலைமை இடமாக கொண்டு புதிதாக தொடங்கப்பட்டுள்ள தென்கிழக்கு கடலோர ரயில்வே மண்டலத்தில் புதிதாக ரயில் நிலையங்கள் இணைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தலில் அனைவரும் வாக்களிப்பதை வலியுறுத்தி காவல்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

------------

விருநகரில் புகழ்பெற்ற ஸ்ரீபராசக்தி மாரியம்மன் கோவிலில் பங்குனி திருவிழாவின் ஒரு பகுதியாக நேற்று நேர்கடன் செலுத்தும் வைபவம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

------------

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் மேல் பகுதியில் மலர்களைக் கொண்டு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் ஆவின் பால் பாக்கெட்டுகளில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிகப்படுகிறது.

------------

**சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 16 சட்டமன்ற தொகுதிகளிலும் நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் நேற்று தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.**

**------------**

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 43 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.**

**பெங்களூருவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 250 ரன் எடுத்தது.**

**251 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய சென்னை அணி 19 புள்ளி 4 ஓவரில் 207 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் பஞ்சாப் அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.**

**------------**

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.**

**நேற்று நடைபெற்ற மற்றொரு போட்டியில் தில்லி அணி 2-0 என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.**

**------------**

**Candidate செஸ் தொடரின் 7வது சுற்றில் பிரக்ஞானந்தா - அமெரிக்காவின் Fabiano Karuana உடன் சமன் செய்தார்.**

**மகளிர் பிரிவில் வைஷாலி - சீனாவின் Tan Zhongyi-கிற்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றார்.**

**-------------**

**ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டி கிர்கிஸ்தான் தலைநகர் Bishkek-ல் இன்று தொடங்குகிறது.**

**இந்த தொடரில் இந்திய மல்யுத்த வீரர் மற்றும் வீராங்கனைகள் மிகுந்த நம்பிக்கையுடன் களமிறங்க உள்ளனர்.**

**மகளிர் 53 கிலோ எடைப் பிரிவில் மீனாட்சி கோயட், ஆடவர் 61 கிலோ எடைப் பிரிவில் Aman Sehrawat, 65 கிலோ எடைப் பிரிவில் Sujeet Kalkal ஆகியோர் பங்கேற்கிறார்கள்.**

**<<<<The End>>>>**